



திருவெறும்பூர் அருகே உள்ள துவாக்குடி நகராட்சிக்கு உட்பட்ட எம்.டி சாலையில் நடந்த "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமினை தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.



ஓசூர் பேருந்து நிலையத்தில் விடியல் பயண திட்டத்தின் கீழ், புதிய பேருந்துகள் என மொத்தம் 10 பேருந்துகளை அமைச்சரும் கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார், மாவட்டச் செயலாளர்கள் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., தே. மதியழகன், சத்யா, முருகன், யுவராஜ், சுகுமாரன், மாதேஸ்வரன் , ஆனந்தைய்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# எதிர்க்கட்சி தலைவரின் நாக்கும் நாடகம் போடுகிறது!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கை



சென்னை, ஜூலை 31-

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் நாக்கும் நாடகம் போடுகிறது என்று தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து டி.ஆர்.பி. ராஜா அறிக்கை வருமாறு:

ஒரு சில நாட்களுக்கு முன்பு "முதலமைச்சர் அவர்கள் பூரண நலம் பெற வேண்டும்" என "சுந்தரா டிராவல்ஸ்" யாத்திரையில் சொன்ன அதே எதிர்க்கட்சி தலைவரின் நாக்குதான் இப்போது 'ஆஸ்பத்திரியில் டேபிள் மீட்டிங்' என நர்த்தனம் ஆடுகிறது. அது சரி பொதுவாக எல்லோரும் டேபிள் முன்பு அமர்ந்து தான் மீட்டிங் போடுவார்கள் என்பது தெரியாமல் தானே பழனிச்சாமி பாவம் டேபிளுக்கு அடியில் மீட்டிங் போட்டார் !

அரசு அலுவல்கள் அனைத்தும் தடையின்றி நடைபெறுகிறதா என அதிகாரிகளை அழைத்து ஆய்வு செய்வது, "உங்களுடன் ஸ்டாலின்" எனும் மகத்தான திட்டத்திற்கான முகாம்கள் திட்டமிட்டபடி நடைபெறுகிறதா என தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளிடம் விவரங்கள் கேட்பது, காணொளிக் காட்சி வாயிலாக கலெக்டர்களுடன் ஆலோசனை நடத்துவது. பொதுமக்களுடன் வீடியோ காலில் பேசி முகாமின் செயல்பாடுகள் திட்டமிட்டபடி மக்களுக்கு சென்றடைகின்றனவா என்று நேரடியாக பயனாளிகளிடம் கேட்டறிதல், பிரதமர் மோடியின் தமிழ்நாட்டுப் பயணத்தின் போது மாநிலத்தின் வளர்ச்சிக்காக நாம் பெற வேண்டிய திட்டங்களுக்காக கடிதம் தயார் செய்து அனுப்பி வைத்தது என மருத்துவர்களின் அறிவுறுத்தலின்படி சில நாட்கள் மருத்துவமனையில் இருந்தபோதும் தொடர்ந்து தடையின்றி தனது மக்கள் பணியை செய்தார் திராவிட நாயகன் நமது முதலமைச்சர் அவர்கள் !

ஸ்டெர்லைட்டுக்கு எதிராகப் போராடியவர்கள் மீது துள்ளத் துடிக்கத் துப்பாக்கிச் சூடு நடத்தி 13 பேரைப் பலி வாங்கிவிட்டு, "டிவியில் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன்" எனச் சொன்னவர் தான் இந்த எதிர்க்கட்சித் தலைவர்.

எந்த காலத்திலும் உருப்படியாக முதலமைச்சர் பணிகளையே செய்யாத எதிர்க்கட்சித் தலைவருக்கு இவையெல்லாம் ஆச்சரியமாகத்தான் இருக்கும். "அம்மா இட்லி சாப்பிட்டார்; செவிலியர்களுடன் பந்து விளையாடினார்; விரைவில் வீடு திரும்புவார்; டிவி பார்த்தார்; கிச்சடி சாப்பிட்டார்; நர்ஸ்களுக்குப் பரிசு கொடுத்தார்; டாக்டர்களுக்கே அறிவுரை கூறினார்" என்றெல்லாம் திரைக்கதை எழுதி நாடகம் போட்டவர்களே உங்கள் தரம் தாழ்ந்த எண்ணங்களை உலகிற்கு பறைசாற்றாதீர்கள் !

அம்மையார் ஜெயலலிதா அவர்கள் இருக்கும் வரை ஒன்றிய அரசின் 'உதய் மின் திட்டத்தில்' அவர் கையெழுத்து போடவில்லை. அவர் மறைந்த பிறகு ஓடோடிப்போய் கையெழுத்து போட்டு தமிழ்நாட்டை வஞ்சித்தது சந்துகளில் இருந்து குரல் கொடுக்கும் ஷாக்க்ஷாத் திரு.பழனிசாமிதான் என்பது ஊருக்கே தெரிந்தபோதும் இன்று அவரே "மின் கட்டணம் உயர்ந்து விட்டது" என நீலிக் கண்ணீர் வடித்திருக்கிறார்.

இப்படி, தானே ஏற்றிய மின்கட்டண உயர்வைக் குறித்து தானே பேசிவரும் பழனிசாமி, ஒன்றிய அரசின் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை குறித்து ஏன் பேச அஞ்சுகிறார்? 2014ம் ஆண்டு ரூ.414ஆக இருந்த சமையல் காஸ் சிலிண்டர் விலை தற்போது ரூ.868.50ஆக உயர்ந்து வளர்ந்து நிற்பது எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாதா? அல்லது எப்போதும் போல நடிக்கிறாரா ?

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### சிவ.வீ.மெய்யநாதன், என்.ஆர். இளங்கோ, சூர்யாவெற்றிகொண்டான் சிறப்புரை !

# ஆகஸ்ட் 2ம் தேதி மயிலாடுதுறையில் கழக வழக்கறிஞர்களுக்கு பயிற்சி பாசறை கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம். முருகன் வேண்டுகோள்!



மயிலாடுதுறை,ஜூலை 31-

மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தி.மு.க சட்டத்துறை மயிலாடுதுறை மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் கழக வழக்கறிஞர்களுக்கு பயிற்சி பாசறை கூட்டம் 02.08.2025 சனிக்கிழமை காலை 10 மணிக்கு மயிலாடுதுறை திருவாரூர் ரோடு, எலந்தங்குடியில் வி. எஸ். பி.திருமண மஹாலில் என் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வி.எஸ்.பிரபாகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

கூட்டத்தில்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர். சிவ.வீ.மெய்யநாதன், கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ, கழக சட்டத் துறை இணை செயலாளர் சூர்யாவெற்றிகொண்டான் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள். கூட்டத்தில் மாநில . மாவட்ட கழக நிர்வாகிகள்,சட்டமன்ற முன்னாள், இந்நாள், உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பொதுக் குழு உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்த கூட்டத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர், துணைத் தலைவர்,அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக வழக்கறிஞர்கள் மற்றும் நீதிமன்ற கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் கூறியுள்ளார்.

### ஏற்றுமதி முறையில் வெளிப்படைத் தன்மை-

# எளிதான ஒழுங்குமுறை ஏற்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 31-

பல துறைகளில் மதிப்பு கூட்டல் (Value Addition) முக்கியத்துவம் பெறும் நிலையில், ஏற்றுமதி முறையில் வெளிப்படைத்தன்மை (Transparency) மற்றும் எளிதான ஒழுங்குமுறை (Ease of Compliance) ஏற்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

ஏற்கனவே பல துறைகளில் மதிப்பு கூட்டல் (Value Addition) முக்கியத்துவம் பெறும் நிலையில், ஏற்றுமதி முறையில் வெளிப்படைத் தன்மை (Transparency) மற்றும் எளிதான ஒழுங்கு முறை (Ease of Compliance) ஏற்படுத்த அரசு எந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது?

குறைந்த முதலீடு கொண்ட சிறு நிறுவனங்கள், மூன்றாம் தரப்பைச் சேர்ந்த ஏற்றுமதி நிறுவனங்கள் (Thirdparty exporters) அல்லது வர்த்தக ஏற்றுமதியாளர்கள் (Merchant exporters) மூலம் தங்களுடைய விநியோகத்தை விரிவுபடுத்த அரசு சிறப்பு நடவடிக்கைகள் எடுத்து உள்ளதா?

எடுத்திருந்தால், அத்தகைய திட்டங்கள் குறித்து விரிவாக விளக்குங்கள் — எளிமைப்படுத்தப்பட்ட நடைமுறைகள், ஊக்கத் திட்டங்கள் அல்லது டிஜிட்டல் தளங்கள் குறித்து விவரங்கள் தரவும்.

வேளாண்மை சார்ந்த பொருட்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு ஏதேனும் திட்டங்களை மேற்கொண்டுள்ளதா, குறிப்பாக ஈரோடு போன்ற வேளாண்மை முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவாக? இருந்தால், அந்த திட்டங்கள் பற்றிய விவரங்களை கூறவும் என்று மக்களவையில் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

### தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சுழற்சிப் பொருளாதாரத்தை ஊக்குவிக்க

# இணைய வழி கழிவுப் பரிமாற்ற மையம் அறிமுகம்!

சென்னை, ஜூலை 31-

நிலைத்த மற்றும் சூழல் சார் வளர்ச்சியை மையமாகக் கொண்டு, பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னணி தொழில்துறை மாநிலமாகத் திகழ்கிறது.

இருப்பினும், விரைவான தொழில்துறை விரிவாக்கம், சாம்பல், மின்னணு கழிவுகள் மற்றும் பல தவிர்க்க முடியாத கழிவுகளையும் உருவாக்குகிறது.

இத்தகைய கழிவுப் பொருட்களை மதிப்புமிக்க வளங்களாகக் கருதி, உயர் மதிப்புள்ள சந்தைப்பொருட்களாக மாற்றும் போது,

அது சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், சுழற்சி பொருளாதாரத்தை (Circular Economy) மேம்படுத்தும் வகையிலும் அமைகிறது.

இந்த நோக்கத்தை அடைவதற்கான தொலைநோக்கு பார்வையுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் (TNPCB) தொடங்கும் ஒரு புதுமையான முயற்சியே இந்த இணைய வழி கழிவு பரிமாற்ற மையம் (Online Waste Exchange Bureau). இந்த தளம், கழிவு உருவாக்குபவர்களையும் சான்றளிக்கப்பட்ட மறுசுழற்சி நிறுவனங்கள் மற்றும் பிற கழிவு பயன்பாட்டாளர்களையும் இணைக்கும் ஒரு பாலமாக செயல்படுகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வி. கிருஷ்ணன்

### ஜூலை 31 (2011)



இராயபுரம் 'ராபின்சன்' பூங்காவில் 1949–ல் கழகம் துவக்கப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, அன்று முதல் கழகப் பணியாற்றி வந்தவர்.

இராயபுரம் பகுதியில் வட்டக் கழகச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

துறைமுகத் தொழிலாளியான இவர், தொ.மு.ச.பேரவையின் கீழ் இயங்கும் 'துறைமுக தொழிலாளர் சங்கத்தை உருவாக்கியதோடு, தொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கு பெற்றதோடு, நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சென்னை மத்திய சிறையில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

## தி.மு.க. பொறியாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### பொறியாளர் அணிச் செயலாளர் கு. கருணாநிதி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் / பொறுப்பாளர் ஒப்புதலோடு விழுப்புரம் தெற்கு, தூத்துக்குடி வடக்கு ஆகிய மாவட்டங்களின் தி.மு.க. பொறியாளர் அணியின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

அமைப்பாளர் - சி. சுரேஷ், 94/2, சி.எஸ்.ஐ. சர்ச் தெரு, நேமூர் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் - 605203.

துணை அமைப்பாளர்கள் - 1) துரை. ஸ்டாலின், 8, ஆஞ்சநேயர் கோயில் தெரு, அனுமந்தபுரம், போரூர் அஞ்சல், விக்கிரவாண்டி தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் - 605202. 2) து. செந்தில்குமார், 2/112, மெயின் ரோடு, வசந்தகிருஷ்ணாபுரம் மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் - 605758. 3) பா. ஆனந்த்குமார், மெயின் ரோடு, ஏனாதிமங்கலம், திருவெண்ணெய்நல்லூர் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் - 607107. 4) ச. யுவராஜ், 5, வாணியர் வீதி, விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம் - 605652. 5) பா. சிங்காரவேலன், 2/92, ஐயர் தெரு, பேரங்கியூர் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் - 607107.

### தூத்துக்குடி வடக்கு மாவட்டம்

தூத்துக்குடி வடக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் இ. ஆபிரகாம் மனுவேல் மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவர் வகித்து வந்த மாவட்ட துணை அமைப்பாளர் பொறுப்பிற்கு **எஸ். கணேஷ்குமார்,** (46/2, நந்த கோபாலபுரம், தூத்துக்குடி - 2.) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29-07-2025.

**கு. கருணாநிதி**
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வெ. இரத்தினம்

### ஜூலை 31 (1985)



1939ல் நீதிக்கட்சியிலும், 1944ல் திராவிடர் கழகத்திலும் தீவிரமாக பணியாற்றி, பின்னர் கழகம் துவக்கப்பட்டபோது கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

1951 முதல் 1980 வரை மதுரை மாவட்ட பிரதிநிதியாக கழகத்தில் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.

தனது இளமைப் பருவத்திலேயே திராவிடர் கழக பற்றாளராக இருந்த காரணத்தால், சாதிஒழிப்பு, கலப்பு திருமணம் ஆகியவற்றை தனது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி, அப்பகுதி மக்களுக்கு எடுக்காட்டாய் விளங்கி, திராவிட இயக்க கொள்கைகளை தன் பகுதியில் வளர்த்தவர்.

கழகம் நடத்திய பல போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.